பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி : 51331 ★ சிறப்பியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible]: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

[illegible] மலர் : 19] சென்னை : மார்கழி 5 (20—12—71) திங்கள் வெளியூர் : மார்கழி 6 (21—12—71) செவ்வாய் [இதழ் : 157

இந்தியத் திட்டங்களுக்கு எதிராக அமெரிக்கா

பிற நாடுகளையும் நிர்ப்பந்திப்பதாக த்தகவல்

மீரட், டிச. 10—

அமெரிக்காவின் நிர்ப்பந்தம் காரணமாக ஜப்பான் இந்தியாலிலிருந்து இரும்புக்கனியை இறக்குமதி செய்ய மறுத்துவருவதாகத் துணை அமைச்சர் ஷா நவாஸ் கான் தெரிவித்தார்.

வேறு சில நாடுகளும் இந்தியாவில் அமைக்கப்பட்டுவரும் உருக்காலைகளுக்கு இயந்திரங்களைத் தரத் தயக்கம் காட்டிவருவதாக அவர் கூறினர்.

பாகிஸ்தானில் பெருங் குழப்பம்--- கொந்தளிப்பு

இராணுவத் தலைவர்கள்மீது விசாரணை நடத்தக் கோரிக்கை

மணிக்கு மணி வந்துகொண்டிருக்கும் புதுப் புதுத் தகவல்கள்

புதுடில்லி, டிச. 20—

மக்களின் கடும் எதிர்ப்புக் காரணமாகப் பாகிஸ்தான் சர்வாதிகாரி யாகியா கான் இராஜினாமா செய்கிறுர்.

போரில் தோல்வியடைந்ததற்கும் -- கிழக்கும் பாகிஸ்தானை இழந்துவிட்டதற்கும் யாகியா கானே பொறுப்பு எனக் கண்டித்துப் பாகிஸ்தான் மககள் பெரும் ஆர்ப்பாட்டம நடத்திவருகின்றனர். யாகியாவின் கொடும்பாவி கொளுத்தப்பட்டது.

நேற்றுக்கூட, அவருடைய இராஜினாமா செய்தி மறுக்கப்பட்டது; ஆனுல், 'இனிமேல் சமாளிக்க முடியாது' என்று உணர்ந்த பிறகு அவர் இராஜினாமா செய்வது தவிர்கக முடியாததாகிவிட்டது.

பாகிஸ்தான் விமானப் படையின் முன்னுள் தலைமைத் தளபதி ஏர் மார்ஷல் அஸ்கர் கான், நேற்று யாகியா கானைக் கண்டித்து பகிரங்கமாகவே பேசினுர்; யாகியா கான்மீது விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் அவர் வற்புறுததினுர்; இப்படி விசாரணை நடத்தப்படவில்லையானுல், மீண்டும் ஓர் இராணுவப் புரட்சி விரைவில் வரலாம் என்றும் அவர் எச்சரித்தார்.

ஆட்சியை மக்களிடம் ஒபபடைத்துவிட்டு, நாட்டைக் காப்பாற்றும் கடமையில் ஈடுபடுமாறு அவர் இராணுவத்தினரைக் கேட்டுக்கொண்டார்.

"யாகியா கானுக்குத் துணை நின்ற வேறு பல பெரிய இராணுவ அதிகாரிகளும் விசாரிக்கப்பட வேண்டும்" என்று அவர் வற்புறுத்தினுர்.

ஒரே குழப்பமாக இருந்துவரும் பாகிஸ்தானின் தலைமையமைச்சர் பதவியை, பூட்டோ ஏற்பது நிச்சயம் ஆகிவிட்டது; அவர், அமெரிக்காவில் நிக்சனுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுத் திரும்பிக்கொண்டிருக்கிறுர்.

அமெரிக்காவில் செய்தியாளரிடம் பேசிய பூட்டோ, தாம் அவாமி லீக் தலைவர்களிடம் விவாதம் நடத்தத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்; ஆனுல் அது, 'பிரிவினைபடாத பாகிஸ்தான்' என்ற அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்.

"முஜிபுர் ரகிமானிடம் பேசுவீர்களா?" எனக் கேட்கப்பட்டதற்கு, அவர் பதில் சொல்லாமல் மழுப்பினுர்.

"எது ஒன்றையும் முடிவு செய்வதற்குக் குறைந்தது நான்கு வாரங்களாவது ஆகும்; மககளிடம கலந்து பேசவேண்டியிருக்கிறது" என்று அவர் கூறினுர்.

புதிய அத்தியாயம் துவங்கப்போகிறதாம்

"பாகிஸ்தான் -- அமெரிக்க உறவில் ஒரு புதிய அத்தியாயம் துவங்கப்போகிறது" என்று குறிப்பிட்ட அவர், 'சீனுவுடனும் நெருங்கிய தொடர்பு இருந்துவரும்' என்று அறிவித்தார்; என்னுடைய நாட்டின் நில அமைப்பும் பொதுநலனும் அதை அவசியமாக்கியிருக்கிறது' என்றும் அவர் கூறினுர்.

வசையும் பாடினுர் -- அச்சுறுத்தவும் செய்தார்

இந்தியாமீது வசைபாடுவதற்கும் அவர் மறக்கவில்லை; 'இந்தியா வெற்றிக்களிப்பில் திளைக்கவேண்டாம்; இது ஒரு வெற்றியல்ல' என்று அவர் கூறினுர்.

"பாகிஸ்தான் மூக்கை உடைக்க முடியும் என்று இந்தியா நினைத்தால் அவர்கள் கற்பனையிலும் காணமுடியாத அளவில் இந்தியத் துணைக்கண்டம் இரத்த வெள்ளத்தில் ஆழும்" என்று பூட்டோ அச்சுறுத்தியிருக்கிறுர்.

பூட்டோவுக்கு மகுடாபிஷேகமாம்

பூட்டோ இன்று இஸ்லாமாபாத் வந்தடைகிறுர்; அவர் வந்தடைந்தவுடன் -- அவரிடம் ஆட்சிப் பொறுப்பு ஒம்படைக்கப்படும் என்றும், யாகியா கான் பதவி விலகுவார் என்றும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்குத் துணையான வகுப்புவாதக் கட்சிகள்

வங்க தேச அரசு தடை விதித்தது

கல்கத்தா, டிச. 20—

வங்க தேசத்தில் வகுப்புவாதக் கட்சிகள் அனைத்தையும் தடை செய்து அரசு உத்தரவிட்டிருக்கிறது.

ஜமாத் இசுலாமி, நிசாம்-இ-இசுலாம் கட்சி, பாகிஸ்தான் சனநாயகக் கட்சி, மற்றும் முஸ்லிம் லீகின் எல்லாப் பிரிவுகளும் தடை செய்யப்பட்டுவிட்டன.

இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் வங்க தேச உள்துறை அமைச்சர் குமருஸ்சமான் இதைத் தெரிவித்து, தமது நாடு மதச் சார்பற்றது என்பதை ஏற்கனவே அறிவித்ததற்கேற்ப, இந்தக் கட்சிகள் தடை செய்யப்படுவதாகக் கூறினுர்.

"இந்த நான்கு கட்சிகளின் உறுப்பினர்களும் பாகிஸ்தான் ஆககிரமிப்புககுத் துணையாகச் செயல்பட்டிருக்கின்றனர் என்பது வங்க தேச அரசுக்கு நன்றுகத் தெரியும்" என்று அவர் கூறினுர்.

அமெரிக்காவின் தயவே வேண்டாம்

அதனிடம் உதவி பெறுவதே கேவலம்

வங்க தேச தலைமையமைச்சர் திட்டவட்டமான அறிவிப்பு

முஜிபுர் நகர், டிச. 20—

"வங்க தேசததைச் சீர்படுத்தும் முயற்சியில் அமெரிக்காவின் பொருளாதார உதவியை என்னுடைய நாடு கோராது"

என்று தலைமையமைச்சர் தாசுதீன அகமத் அறிவித்தார்.

"வங்க தேச மக்களைப் படுகொலை செய்யும்போது பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும் கூட்டாகவும் இருந்து செயல்பட்ட அமெரிக்காவிடம் பொருளாதார உதவி கேட்கும் பேச்சே இல்லை"

என்று கூறிய அவர் 'அது கேவலமானதுமாகும்' என்றும் தெரிவித்தார்.

பேராசிரியர் அன்பழகன் 50-வது ஆண்டு பிறந்த நாள்

கலைஞர்--நாவலர் மற்றும் அமைச்சர்கள்-- தலைவர்கள் வாழ்த்து

சென்னை, டிச. 20—

திராவிட முன்னேற்றக் கழக முன்னணித் தலைவர்களில் ஒருவரும் -- தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், தமது ஐம்பதாம் ஆண்டு பிறந்த நாள் விழாவை நேற்றுத் தம் இல்லத்தில் எளிமையாகக் கொண்டாடினுர்.

நேற்றுக் காலையில் அவர் தம் குடும்பத்தினருடன் அண்ணு கல்லறையில் மலர் வளையம் வைத்தும்—அண்ணு சாலையில் உள்ள அண்ணு சிலைக்கு மாலை அணிவித்தும வணங்கினுர்.

முதலமைச்சர் கலைஞர் நேரில் சென்று மலர் மாலை அணிவித்து -- ஆரத் தழுவி தமது வாழ்த்துக்களைக் கூறினுர்.

கல்வியமைச்சர் நாவலர், மற்றும் அமைச்சர்கள் என். வி. நடராசன், திருமதி சத்தியவாணி முத்து, ப. உ. சண்முகம், எஸ். ஜே. சாதிக் பாட்சா, க. இராசாராம், அன்பில் தர்மலிங்கம், ஓ.பி. இராமன், எஸ். இராமச்சந்திரன் ஆகியோரும் மாலை அணிவித்து வாழ்த்துக் கூறினுர்.

கழகப் பொருளாளர் -- புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள், மிகப் பெரிய மாலை ஒன்றினை அணிவித்துக் கட்டித் தழுவி வாழ்த்துக் கூறினுர்.

சட்டமன்ற மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு, பேரவைத் தலைவர் கே. ஏ மதியழகன், துணைத் தலைவர் சீனிவாசன் ஆகியோரும, சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களும் வந்திருந்து வாழ்த்துக் கூறினர்.

சென்னை நகர மேயர் திருமதி காமாட்சி செயராமன், துணை மேயர் என். வி. என். சோமு, முன்னுள் மேயர் வி. முனுசாமி எம்.சி., மாவட்டச் செயலாளர் -- துணைச் செயலாளர்கள், திரைப் படத் துறையினரான ஏ. எல். சீனிவாசன், சத்யா மூவிஸ் ஆர். எம். வீரப்பன், பல்கலைக் கழகத் துணைவேந்தர் என். டி. சுந்தரவடிவேலு, மருத்துவத் துறை -- கல்வித் துறை அதிகாரிகள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், கழகத் தோழர்கள், முன்வணித தலைவர்கள் ஆகியோரும் திரளாக வந்திருந்து மலர் மாலைகள் அணிவித்து வாழ்த்தினர்.

பேராசிரியரின் ஐம்பதாவது பிறந்த நாளையொட்டித் தமிழக மெங்கனுமிருந்து வாழ்த்துச் செய்திகளும் -- தந்திகளும் வந்தன.

அவரது புரசைவாக்கம் தொகுதி மக்கள் கூட்டம் கூட்டமாக வந்திருந்து வாழ்த்துக் கூறினர்.

சிற்றுண்டி அளித்து படை வீரர்களுக்கு வழியனுப்பு

புரட்சி நடிகர் ரூ. 2,000 வழங்கினுர்

சென்னை, டிச. 20—

எல்லைப் பகுதிக்குச் செல்லும் இந்திய வீரர்களுக்குச் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் நேற்று உற்சாக வழியனுப்பு விழா நடந்தது; அவர்களுக்குச் சிற்றுண்டியும் -- தேநீரும் வழங்கப்பட்டன.

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., திருமதி கிளப்வாலா ஜாதவ் ஆகியோர் இவற்றை வழங்கினர்.

சிற்றுண்டி வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவிடம் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ரூ. 2,000 கொடுத்தார்.

சரணடைந்த 25,000 பாகிஸ்தான் வீரர்கள்

ஆயுதங்களை இந்தியப் படையிடம் ஒப்படைத்தனர்

டாக்கா, டிச. 20—

வங்க தேசத்தில் சரணடைந்த 1,000 அதிகாரிகள் உட்பட 25,000 இராணுவத்தினர் நேற்று தங்கள் ஆயுதங்களை இந்தியத் தளபதிகளிடம ஒப்படைத்தனர்.

முன்னுள் கிழக்கு வங்கக் கவர்னர் மாலிக்குக்கு இராணுவ ஆலோசகராக இருந்த பாமன் அலியும் தமது ஆயுதத்தை ஒப்படைத்தார்.

"சரணடைந்தவர்களுக்கு ஜெனிவா கோட்பாட்டின்படியான அனைத்து உரிமைகளும் வழங்கப்படும்" என்று உறுதியளித்த இந்தியத் தளபதி, 'இராணுவச் சட்டத் திட்டங்களுக்கு அவர்கள் உட்பட்டு நடக்கவில்லையானுல் கடும் தண்டனைக்கு உட்படுவர்' என்றும் எச்சரித்திருக்கிறுர்.

யாகியா கான் தப்பியோடுவாரா?

யாகியா கான் பதவியிலிருந்து விலகியதும் தப்பியோடாமலிருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், அவர்மீது விசாரணை நடத்தவேண்டும் என்றும் பாகிஸ்தானின் முன்னுள விமானப் படைத் தளபதி ஏர்மார்ஷல் அஸ்கர் கான் வலியுறுத்தியுள்ளார்.

பூட்டோ வந்துவிட்டாராம்

பூட்டோ இன்று பகல் விமானம் மூலம் பாகிஸ்தான் வந்தடைந்தார்; அவரை விமான நிலையத்தில் செய்தியாளர்கள் சந்தித்து, 'ஏதேனும் செய்தியுள்ளதா' என்று கேட்டதற்கு, 'விரைவில் செய்தியாளர்களைச் சந்திப்பேன்' என்று கூறினுராம்.

யாகியா கான் பதவி விலகினுர்

அமெரிக்காவிலிருந்து பூட்டோ இன்று வந்தடைந்ததும், யாகியா கான் பதவியிலிருந்து விலகினுர்; பூட்டோவிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது என்று கடைசியாக வந்த தகவல் கூறியது.

நம் நாடு
ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ.
திருவள்ளுவராண்டு 2002 மார்கழி 5 (20—12—71) திங்கள்

அமைதி நிலவட்டும்!

இந்தியத் துணைக்கண்டத்தில் போர் ஓய்ந்து அமைதி நிலவுகிறது; இந்த அமைதி, நீடிக்க அமைதியாக நிலைத்து நிற்க வேண்டும் என்பதே நமது அவா!

கடந்த பல திங்களாகவே இந்தியாவை அச்சுறுத்திக்கொண்டிருந்த பாகிஸ்தான், அனைவரும் எதிர்பார்த்தபடியே போர்ப் பிரகடனத்தையும் செய்து தனது முழு வலிமையையும் பயன்படுத்தி இந்தியாவைத் தாக்கத் துணிந்தது.

போரையே விரும்பாத இந்தியா, தன்மீது திணிக்கப்பட்டுவிட்ட போரில் ஈடுபட்டுத் திருப்பித் தாக்க முனைந்தது; மேற்கிலும் — கிழக்கிலுமாக இருமுனைகளிலும் போர் மூண்டது.

சீனாவிடமும் — அமெரிக்காவிடமும், மற்றும் ஆதரவு நாடுகளிடமும் தான் பெற்றுவைத்திருந்த வலிமைமிக்க ஆயுதங்களையெல்லாம் பயன்படுத்தியும், பாகிஸ்தானால் நமது எதிர்த் தாக்குதலைத் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

ஆயிரமாண்டுவரை போர் தொடரும் என்று ஆர்ப்பரித்த பாகிஸ்தான், எண்ணி இரண்டே கிழமைகளுக்குள் சரணாகதியடையும் நிலைக்குப் பணிந்தது வங்க தேசத்தை விடுவிக்கும் நமது இலட்சியமும் நிறைவேறியது.

அத்துடன் போரை நிறுத்த முடிவு செய்த இந்தியத் தலைமை அமைச்சரின் பெருந்தன்மையை உலகமே பாராட்டுகிறது; 'இந்தியாவுக்கு மண்ணாசை இல்லை' என்பதை அனைத்து நாடுகளும் புரிந்துகொள்ள இது ஓர் வாய்ப்பாகவும் அமைந்தது.

இந்தியா போரை நிறுத்திய பின்னும், தாம் நிறுத்தப் போவதில்லை என்று ஆர்ப்பரித்த யாகியா கான், அடுத்த சில மணி நேரங்களுக்குள் தனது முடிவை மாற்றிக்கொள்ளும் நிலை வந்தது; இந்தத் திடீர் மாற்றத்துக்கு காரணம் எதுவாக இருந்தபோதிலும், இந்த நேரத்திலாவது பாகிஸ்தானுக்கு புத்தி வந்ததற்காகப் பாராட்டுகிறோம். போர் வெறி பிடித்த யாகியா கானையும் — பூட்டோவையும் உலகம் நன்குகப் புரிந்துகொண்டுவிட்டது.

'வைபத்தியக்காரன் கிழிந்த துணியும் கோவணத்திற்கு ஆயிற்று' என்பதைப்போல, யாகியா கான் துவக்கிய போரும் ஒருவிதத்தில் பயனுள்ளதாகத்தான் முடிந்திருக்கிறது. வங்காள தேசத்தை இவ்வளவு விரைவில் விடுவிக்க இந்தப் போர்தான் நல்வாய்ப்பாக அமைந்தது. நாமாகச் சென்று வங்காள தேசத்தை விடுவிக்கப் போர் தொடுக்கவில்லை; தானாக வந்த போரைப் பயன்படுத்திக் கொண்டு நாம் வங்காள தேசத்தை விடுவித்தோம்.

பாகிஸ்தான் இராணுவக் கொடுங்கோலர்கள் கையில் சிக்கிச் சீரழிந்துகொண்டிருந்த வங்காள தேசமும் — அதன் மக்களும், சுதந்திரத்தைச் சுவைக்கத் தொடங்கிவிட்டார்கள். முழு விடுதலை பெற்ற தனிச் சுதந்தர நாடாக வங்காள தேசம் இன்று விளங்குகிறது.

ஐ. நா. அவையிலும் ஏற்பாடு என்றோ அரசியல் தீர்வு என்றோ பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை; இனி சுதந்தர வங்காள தேசத்தை அங்கீகரிப்பது ஒன்றே உலக நாடுகளின் கடமையாகும்.

உலக நாடுகள் பேரவையான ஐ. நா. அவையில் வங்காள தேசத்தைச் சேர்த்துக்கொள்வதுதான புத்திசாலித்தனமாகும்.

"நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும்" என்ற எண்ணத்தில் ஒவ்வொரு நாடும் செயல்படுவதே விரும்பத்தக்கது.

'வங்காள தேசத் தந்தை' எனப் புகழ்பெற்ற ஷேக் முஜிபுர் ரகிமானை உடனடியாக விடுவிக்க உலக நாடுகள் அனைத்துமே முயற்சி மேற்கொள்ள வேண்டும்; கூடிய விரைவில் அவர் விடுவிக்கப்பட்டு — அவரது சீரிய தலைமையில் வங்க தேசம் தனிச் சுதந்தர — சோஷலிசக் குடியரசு நாடாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

இந்தப் போரில் மகத்தான வெற்றியினை ஈட்டிய இந்தியாவின் நிலையும் — தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் மதிப்பும் உலக அரங்கில் இமயமென உயர்ந்துவிட்டன.

போர் வெறிபிடித்த பாகிஸ்தானுக்குத் துணை நின்றதன்மூலம், அமெரிக்க அதிபர் நிக்சன் வெளிநாடுகளில் மட்டுமன்றித் தம் சொந்த நாட்டிலேயும் செல்வாக்கை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

யாகியாகானின் ஆத்மார்த்தநண்பனாக இருந்த சீனா, சரியான பாடத்தைக் கற்றுக்கொண்டது.

ஒவ்வொரு கட்டத்திலும் நியாயத்தின் பக்கம் நின்று செயல்பட்ட சோவியத் இரஷ்யா, நமது மனமார்ந்த பாராட்டுதலுக்குரியது.

நமக்கு ஆதரவும் அனுதாபமும் காட்டிய ஏனைய நாடுகளும் பாராட்டுதலுக்குரியவை; அமெரிக்காவை சாய்காலாகக்கொண்ட நாடுகள், நமக்கு எதிராகச் செயல்பட்டதற்காக நாம் கவலைப்படவில்லை; அவற்றின் நிலைகண்டு பரிதாபமே கொள்கிறோம்.

உயிரையும் பொருட்படுத்தாது வீரஞ்செறிந்த போரில் ஈடுபட்டுத் தாய்நாட்டுக்காக உயிரீந்த தியாகிகட்கெல்லாம் நமது வீரவணக்கம் உரித்தாகுக!

களத்திலே விழுப் புண்களை ஏற்ற வீரர்கள் அனைவருக்கும் நமது பாராட்டையும் — நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்வோம்.

இந்தியப் படையுடன் இணைந்து நின்று போரிட்ட வங்க தேச விடுதலைப் படையினரும் பாராட்டுக்குரியவர்கள் ஆவர்; அவர்கள், கடந்த ஒன்பது மாத காலமாக ஏற்ற இன்னல்கள் — கொடுமைகள் ஏராளம்; அவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதைத்தான் இலட்சியமாகக்கொண்டு இந்தியப் படை வங்க தேசத்தில் நுழைந்தது.

இனி வங்காள தேசமும் — இந்தியாவும் நட்பு நாடுகளாகத்தான் இருக்குமே தவிர, வங்காள தேசத்தில இந்தியாவின் ஆதிக்கம் சிறிதளவும் இருக்கப் போவதில்லை; இதனைத்தான் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் தமது உரையில் சுட்டிக் காட்டியுள்ளார்; 'தேவைக்குமேல் ஒரு நாள்கூட நமது படை வங்காள தேசத்தில் இருக்காது' என்று அவர் கூறியிருக்கிறார்.

"போர் ஓய்ந்துவிட்டது என்றாலும், போர் விளைவுகளுடன் நடத்தவேண்டிய போர் நம்மை எதிர்நோக்கியிருக்கிறது" என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறியிருப்பதும் சிந்திக்கத்தக்கதாகும்.

போர்க் காலத்தில், கட்சி — கருத்து வேறுபாடுகளையெல்லாம் மறந்து இந்திய மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு நின்றதைப்போலவே தொடர்ந்து இருந்து — போர் விளைவுகளை சமாளிக்க உதவுவார்கள் என நம்புகிறோம்.

பாகிஸ்தான் மக்கள்மீது நமக்கு என்றும் பகைமை இல்லை — அதன் ஆட்சியாளர்களின் போக்கால்தான் நாம் அவர்களுடன் மோத நேர்ந்தது — என்பதை, நமது தலைமையமைச்சர் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இனியேனும் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டு — இந்தியாவுடன் நட்புறவுகொண்டு — இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதி நிலவ ஒத்துழைப்பதுடன், தங்கள் சொந்த நாட்டில் உள்ள வறுமையையும் பஞ்சத்தையும் எதிர்த்துப் போராட முனைவார்களாக!

போர்முனையில் வீர மாணமடைந்த தமிழ் வீரருக்கு 'வீர சக்கர' விருது

ஆறுமுகம் குடும்பத்தினருக்கு தலைமையமைச்சர் ஆறுதல்

வேலூர், டிச. 20—

நடைபெற்ற இந்தியா — பாகிஸ்தான் போரில் வீர மரணமடைந்த தமிழ் வாலிபர் ஆறுமுகம், ஒரு ஏழை அரிசனக் குடும்பத்தைச் சேர்ந்தவராவார்.

அவர், வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூருக்கு அருகிலுள்ள தாத்தவல்லி கிராமத்தைச் சேர்ந்தவராவார்.

60 வயதான தாயும், நான்கு சகோதரர்களும் — ஒரு சகோதரியும் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் உழவுத் தொழில் செய்து வருகின்றனர்.

இந்தக் குடும்பத்துக்கு முக்கிய ஆதரவாக இருந்துவந்தது இளைஞர் ஆறுமுகமே ஆவார்.

6 ஆண்டுகளுக்குமுன் ஆறுமுகம் இராணுவத்தில் பீரங்கிச் சுடும் பிரிவில் சேர்ந்தார்.

கடந்த சூன் மாதம் ஆறுமுகம் முனியம்மாள் என்னும் பெண்மணியை மணந்தார்; மிக் குறுகிய காலமே இத்தம்பதியினர் சேர்ந்து வாழ்ந்திருந்தனர்; முனியம்மாள் இப்போது கர்ப்பவதியாக இருக்கிறார்.

ஆறுமுகத்துக்கு 'வீர சக்ர' விருது வழங்கப்பட்டிருக்கிறது. ஆறுமுகத்தின் இழப்புக் குறித்து தலைமையமைச்சர் இந்திரா காந்தி தமது வருத்தத்தைத் தெரிவித்ததுடன், அக்குடும்பத்தினருக்குத் தமது அனுதாபத்தைத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"அருமைமிக்க மனைவியையும் — தைரியத்தையும் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"வீரர் ஆறுமுகத்துக்கு அண்மையில்தான் திருமணம் நடந்தது; அவர் தன் இளம் மனைவியை விதவையாக விட்டுச் சென்றுவிட்டார்; அந்த வீரரின் குடும்பத்தைப் பாதுகாத்துப் பராமரிப்பது நமது பொறுப்பாகும்."

[இந்தக் கடிதத்தைச் சென்னையில நடந்த பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் படித்தார்.]

வீரர் ஆறுமுகம் குடும்பத்திற்கு ஆறுதல் வழங்கும் பொறுப்பு

'அனைவருக்கும் உண்டு' என முதலமைச்சர் வலியுறுத்தல்

இந்தக் கடிதத்தின் ஒரு பகுதியை நேற்று சட்டப் பேரவையில் படித்துக் காண்பித்துவிட்டு முதலமைச்சர் கூறியதாவது:—

"இப்படிப்பட்ட கடிதங்கள், இது போன்ற போர்க் காலங்களில் ஏராளமாக வரக்கூடும்.

"ஆறுமுகங்கள் ஆயிரம் ஆயிரம் தோன்றக்கூடும்; ஆறுமுகங்களுடைய குடும்பங்களுக்கு ஆறுதல் வழங்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

"அந்தப் பணியில் நாம் ஈடுபடுவோமேயானால்தான், 'இந்தியாவில் இருக்கின்ற 55 கோடி மக்களும் — தமிழ்நாட்டில் இருக்கின்ற $4\frac{1}{2}$ கோடி மக்களும் போர்க்களத்தில் நிற்கின்றனர்' என்கிற உணர்ச்சி எதிரிகளுக்கு உருவாகும்."

தமிழ்மகனின் வீரச் செயல்

பாராட்டி முதல்வருக்கு இராணுவ அதிகாரி கடிதம்

சென்னை, டிச. 18—

தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர் ஆறுமுகம், ஸ்ரீநகர் விமான நிலையத்தைக் காவல்காத்து கொண்டிருந்தபோது, விமான நிலையத்தில் பாகிஸ்தான் போர் விமானம் குண்டு வீசியது.

குண்டுவீச்சில் காயமடைந்த வீரர் ஆறுமுகம், குண்டுக் காயத்துடன் கையிலிருந்த துப்பாக்கியால் பாகிஸ்தான் விமானத்தைச் சுட்டுவீழ்த்திவிட்டு வீர மரணமடைந்தார்.

போரில் வீரமரணம் அடைந்த ஆறுமுகத்தின் வீரத்தைப் பாராட்டி முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குப் போர் முனையிலிருந்து, இராணுவ அதிகாரி பால், கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார்; அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:—

"பாகிஸ்தான் விமானத்தை வீழ்த்த — குண்டடிபட்ட நிலையிலும் இந்திய இராணுவ வீரர் ஆறுமுகம் வீரப் போர் புரிந்தார்.

"தம் உடலில் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த கடைசி விநாடி வரையில் அவர் போர் புரிந்து வீரச் சாதனை புரிந்தார்.

போரில் உயிரிழந்தோர்—உடல் ஊனமுற்றோர் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்பு

தலைமையமைச்சர் இந்திரா காந்தி அறிவிப்பு

புதுடில்லி, டிச. 20—

"பாகிஸ்தானுடன் நடைபெற்ற போரில், இராணுவ வீரர்கள் பலர், தங்கள் உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள்; இது, ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

"அவர்களுடைய மனைவிகள் — குழந்தைகள் ஆகியோரின் துயரத்தைத் துடைக்க முன்வரவேண்டியது, நன்றியுள்ள இந்த நாட்டின் கடமையாகும்.

"உயிர்த் தியாகம் செய்தவர்களின் குடும்பத்தினருக்கும் — மற்றும் போர் முனையில் உடல் உறுப்புக்களை இழந்தவர்களுக்கும் — மற்றும் இதர உடல் ஊனமடைந்தோருக்கும் 25 பேர்களுக்குமேல் வேலை செய்யும் எல்லா தனியார் நிறுவனங்களும் — அரசாங்க நிறுவனங்களும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் வேலைவாய்ப்புகளைக் கட்டாயமாக ஒதுக்க வகைசெய்யும் ஒரு மசோதாவை அரசாங்கம் விரைவில் கொண்டுவரும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மக்களவையில் அறிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்விச் சலுகைகளை விரிவுபடுத்தவும், மரணமடைந்த வீரர்களின் மனைவிமார்களும் — உடல் ஊனமடைந்தோரும் வேலை வாய்ப்புக்களைப் பெற பயிற்சியளிக்கவும் அரசு நடவடிக்கைகளை எடுக்கும்."

வங்க தேச விடுதலை விழா—இந்தியப் பாதுகாப்பு நாள்

டிச. 26-ல் தமிழ்நாடு முழுவதிலும் ஊர்வலம்—பொதுக்கூட்டங்கள்; அமைச்சர்கள்—அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பர்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முடிவு—முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, டிச. 20—

"ஏற்கனவே எடுத்த முடிவின்படி, டிசம்பர் 26ந்தேதி, வங்க தேச விடுதலை விழா — இந்தியப் பாதுகாப்பு நாள்' என்ற தலைப்பில், தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டங்களும் — ஊர்வலங்களும நடைபெறும்.

"அந்த நிகழ்ச்சிகளை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடத்துவார்கள்; அந்த நாளில் அரசு அலுவலர்கள் — ஆசிரியர்கள் — மாணவர்கள் — தொழிலாளர்கள் — சீருடையினர் — மகளிர் அணியினர் — என். சி. சி.-யினர் அனைவரும் பங்கு பெற்று பவனி நடத்துவர்"

என்ற தகவலை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டு முடிவிற்குப் பின், செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் தெரிவித்தார்.

மாவட்ட வாரியாக அமைச்சர்கள் கலந்துகொள்ளும் விவரம் வருமாறு:—

தஞ்சை மாவட்டம் திருவாரூரில் 26-ந்தேதியும், மதுரையில் 27-ந் தேதியும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பங்குகொள்வார்.

மற்ற ஊர்களில் 26-ந்தேதி நடைபெறும் விழாவில் பங்குகொள்ளும் அமைச்சர்கள் விவரம்:—

சென்னை :—கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்.

கோவை :—மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்.

கடலூர் :—தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன்.

வேலூர் :—அரிசன நலத்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து

தர்மபுரி :—உணவுத்துறை அமைச்சர் ப. உ. சண்முகம்.

சேலம் :—தொழில்துறை அமைச்சர் செ. மாதவன்.

இராமநாதபுரம் :—பொதுப்பணித் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா.

நெல்லை :—கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார்.

திருச்சி :—வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம்

நாகர்கோவில் :—பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம்.

தூத்துக்குடி:—மின்துறை அமைச்சர் ஓ. பி. இராமன்.

காஞ்சிபுரம் :—போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்.

நீலகிரி :—அறநிலையத் துறை அமைச்சர் மு. கண்ணப்பன்.

வங்க தேச மக்களுக்கு உணவுப் பொருள்

நட்பு நாடுகளின் உதவி கோரிக்கை

முஜிபுர் நகர், டிச. 17—

"வங்க தேச மக்களுக்கு உணவளிக்கக் குறைந்தபட்சம் மாதம் ஒன்றுக்கு 1,50,000 டன் அரிசியாவது வேண்டும்; இந்தியாவிடமும் மற்ற நேச நாடுகளிடமும் இந்தப் பிரச்சினை ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது"

என்று வங்க தேச உள்துறை அமைச்சர் காமருஜ்ஜமான் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"மக்களுக்கு நியாய விலைக்குக் கிடைக்கும்படியாக ஒவ்வொரு கிராமத்திலும் நியாய விலைக் கடைகள் திறக்கவும், உற்பத்தியாளரிடம் உபரியாக உள்ள உணவுப் பண்டங்களைக் கோரிப் பெறவும் யோசித்துவருகிறோம்" என்றும் அவர் சொன்னார்.

வங்க தேசத்துக்கு மருந்துகள்

4 ஐரோப்பிய நாடுகளின் நன்கொடை

புதுடில்லி, டிச. 17—

வங்காள தேசத்துக்கு சுவீடன் — டென்மார்க் — பின்லாந்து — நார்வே ஆகிய நாடுகள், மருந்து மற்றும் ஆடைகளைச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்ப முடிவு செய்துள்ளன.

இப்பொருட்களைக் கொண்டுவரும் முதற் குழு, வருகிற ஞாயிறன்று புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



போரினால் ஏற்பட்ட விளைவு — இந்தியப் பாதுகாப்பு முயற்சி

மத்திய அரசின் செயல் திட்டங்கட்குத் தமிழகம் தொடர்ந்து ஆதரவு அளிக்கும்

மாவட்ட அளவில் பாதுகாப்புக் குழு அமையும்—அனைத்துக் கட்சியினரும் இடம்பெறுவர்

அரசுடன் ஒத்துழைத்து உரிய பணிகள் பல ஆற்றுவர்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டு முடிவுகள்

சென்னை, டிச. 20—

'இந்தியாவும் — பாகிஸ்தானும் போர் முனையில் சண்டையை நிறுத்தி இருந்தாலும், இன்னும் நெருக்கடி நிலை தீரவில்லை என்பதையும் — நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதையும் இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"போரின் காரணமாக ஏற்பட்டுள்ள விளைவுகளைச் சமாளிக்கவும் — இந்தியப் பாதுகாப்புக்கான முயற்சிகளில் கண்காணிப்பாக இருக்கவும் — இந்திய அரசு மேற்கொண்டுள்ள செயல் திட்டங்களுக்குத் தமிழகம் தொடர்ந்து ஆதரவை அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசின் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

"மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் குழுவைப் போல், மாவட்ட அளவில் அனைத்துக் கட்சியினரும் கொண்ட பாதுகாப்புக் குழுவினை அமைக்கும் பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்வது என முடிவு எடுக்கப்பட்டது.

"அந்தக் குழுவினர், அரசுடன் ஒத்துழைத்து — போர் முனையில் காயம்பட்டுள்ள வீரர்களுக்கு உதவிடவும் — உயிர்துறந்த வீரர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் வழங்கிடவும் — நெருக்கடி நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு 'பதுக்கல்' வியாபாரம் போன்ற சமூக விரோதச் செயல்களைக் கண்காணித்திடவும் துணை நிற்பர்"

என்று முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிற்குப்பின் செய்தியாளர்களிடை சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு டிச. 18-ம் நாளன்று கோட்டையில் நடைபெற்றது.

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமை தாங்கினார்.

மாநாட்டில், எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அமைச்சர்கள் — தலைமைப் போலீசு அதிகாரி (ஐ ஜி) எப். வி. அருள், தென் பகுதி முப்படைகள் கூட்டுத் தளபதி கே. ஏ. எஸ். இராஜா மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பு நிதிக்குச் சிறப்புப் பரிசுச் சீட்டு

முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

"'பாதுகாப்பு நிதி பரிசுச் சீட்டு' என்ற பெயரில், ஒரு சிறப்புப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் மார்ச் திங்களில் நடத்த முடிவு எடுக்கப்பட்டது; அந்தப் பரிசுச் சீட்டு விற்பனை சனவரியில் தொடங்கும்; அதில் ஐந்து கோடி ரூபாய்க்குமேல் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

உண்டியல் மூலம் நிதி திரட்டுவோர் கவனத்திற்கு:

ஆங்காங்கு உண்டியல்கள் மூலம் நிதி திரட்ட யார் முயன்றாலும், அவர்கள், அரசாங்கத்தில் அங்கீகார முத்திரை பெற்ற உண்டியல்களைத்தான் பயன்படுத்த வேண்டும்; இப்படிப் பயன்படுத்தாமல் உண்டியல் வசூலிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

நன்கொடைப் பொருள்கள்

போர் வீரர்களுக்கு உதவிடும் பொருட்டு அமைக்கப்பட்ட 'போர் வீரர்கள் உதவிக் குழு'வுக்கு நன்கொடைப் பொருள்கள், ஆங்காங்கு மாவட்டங்களிலிருந்து அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்வார்கள்.

சிரமங்கள் ஏற்படாமலிருக்கத் தீவிர நடவடிக்கை

மண்ணெண்ணெய், சர்க்கரை ஆகியவைகளைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுக்கவேண்டும் என்று கலெக்டர்களுக்குக் கூறப்பட்டிருக்கிறது; இப்போதே மாவட்டத்தில் அதற்கான உரிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்ற தகவலைக் கலெக்டர்களும் கூட்டத்தில் கூறியிருக்கிறார்கள்.

ஒத்துழைக்க வேண்டுகோள்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட இந்த முடிவுகள் வெற்றிகரமாக அமையும் வண்ணம் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மார்ச் திங்களுக்குள் இந்த வசூலை எல்லாம் முடிக்கும்படி மாவட்டக் கலெக்டர்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

மணலி உர ஆலை

அடுத்த ஆண்டில் முழு அளவில் இயங்கும்

சென்னை, டிச 18—

சென்ற ஆண்டு உற்பத்தியைத் துவக்கிய மணலி உர உற்பத்தித் தொழிற்சாலை, அடுத்த ஆண்டு செப்டம்பரில் முழு அளவு உற்பத்தித் திறனை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகவலை, சட்டப்பேரவையில் தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் கேள்விநேரத்தின்போது தெரிவித்தார்.

திட்டங்களுக்கான மத்திய உதவியில் வெட்டு

வங்காள தேச சீரமைப்புச் செலவை ஈடுகட்டும் ஏற்பாடு

புதுடில்லி, டிச 18—

போரினால் பாதிக்கப்பட்ட வங்க தேசத்தில் மறுவாழ்வுப் பணிக்கும் உடனடியாக ரூ 650 கோடி தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வங்க தேசத்தில் நாசமாக்கப்பட்ட அல்லது சேதம் விளைவிக்கப்பட்ட பாலங்கள் — கட்டடங்கள் மற்றும் பல்வேறு தொடர்பு நிலைகளைச் செப்பனிட இத்தொகை உடனடியாகத் தேவைப்படுவதாகத் திட்டக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பொறுப்பைச் சமாளிப்பதற்காக மாநிலங்களின் 1972—73-ம் ஆண்டுக்கான திட்டத்தில் மத்திய உதவியின் பங்கை அதிக அளவு கூடுதல் பற்றுச் சுமையுள்ள மாநிலங்களுக்கு 3 சதவிகிதமும், இதர மாநிலங்களுக்கு 5-சதவிகிதமும் குறைக்கத் திட்டக் குழு எண்ணியிருக்கிறது.

தலைமையமைச்சர் பெற்ற விருது

தமிழக முதலமைச்சர் கலைஞர் பாராட்டு

சென்னை, டிச. 19—

இந்தியாவின் மிக உயர்ந்த 'பாரத ரத்னா' விருதினைப் பெற்ற தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு, தமிழக முதலமைச்சர் கலைஞர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளதாவது :—

"நாட்டின் மிக உயர்ந்த விருதாகிய 'பாரத ரத்னா' விருது தங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதையொட்டித் தமிழக மக்கள் — தமிழக அரசு — மற்றும் என் சார்பாக நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்."

"வரலாற்றில் இடம் பெறத்தக்க வெற்றியை ஈட்டியுள்ள இந்த நேரத்தில், இந்தியா மதித்துப் போற்றிவரும் மனித மாண்புகளுக்கும் — உரிய இலட்சியங்களுக்கும் மதிப்பு அளித்திட நீங்கள் எடுக்கும் முடிவுகளை ஒரே குரலில் நின்று நிறைவேற்றுவதில், எங்கள் முழு ஒத்துழைப்பையும் அளிப்போம் என்று உறுதி கூறுகிறேன்."

ஆளுநர் கே. கே. ஷா வாழ்த்து

சென்னை, டிச. 19—

தலைமையமைச்சர் இந்திரா காந்தி, 'பாரத ரத்னா' விருது பெற்றதையொட்டித் தமிழக ஆளுநர் கே. கே. ஷா வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்; அதில் அவர் கூறியிருப்பதாவது :—

"இந்திரா காந்திக்குப் பாரத ரத்னா' விருது வழங்கியதன் மூலம், அவர்மீது மக்கள் வைத்துள்ள மாபெரும் அன்பைக் குடியரசுத் தலைவர் தெரியப்படுத்தியுள்ளார்.

"தலைமையமைச்சரின் விவேகமான — திறமையான — தீவிர மிக்க தலைமையின்கீழ் நீடித்து இந்த நாடு பயன்பெற வேண்டும்; அதற்கேற்ற வண்ணம் அவர் மிக நீண்ட நாள் வாழ வேண்டுமென நாடு முழுமையும் விழைகிறது" என்றும் ஆளுநர் கூறியுள்ளார்.

மதுரை நீதிமன்றம்

வழக்கறிஞர் விடுதி கட்டுவதற்குத் திட்டம்

சென்னை, டிச. 18—

"மதுரை நீதிமன்றத்தில் ரூ. 5,30,000 செலவில் வழக்கறிஞர்கள் தங்குவதற்கான 50 அறைகள் கட்டுவதற்கான ஒரு திட்டத்தைச் சென்னை உயர் நீதிமன்றம் அனுப்பியுள்ளது; இது அரசின் பரிசீலனையில் உள்ளது"

என்று சட்டப் பேரவையில், பி. எஸ். மணியன் (தி.மு.க.) கேள்விக்குப் பதிலளிக்கையில் சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

"சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்பு 2,000-த்திற்குச் சற்று கூடுதலான 'ரிட்' மனுக்கள் பரிசீலனையில் உள்ளன" என்றும் அவர் தெரிவித்தார்.

முஜிபுர் ரகிமானை விடுவிக்கும் முயற்சி

உலக நாடுகட்கு இந்திரா காந்தி வேண்டுகோள்

இலண்டன், டிச. 20—

வங்க தேசத் தலைவர் முஜிபுர் ரகிமானை விடுதலை செய்யப் பாகிஸ்தானை வற்புறுத்துமாறு அமெரிக்க அதிபர் நிக்சனைத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

செய்தியாளர் ஒருவருக்கு அளித்த பேட்டி ஒன்றில் தலைமை அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய — அமெரிக்க உறவு சீர்குலைந்துவிட்ட இந்தச் சூழ்நிலையில் நிக்சன் என்ன செய்ய வேண்டுமென்று தலைமையமைச்சர் விரும்புகிறார் என்று கேட்டதற்கு, 'முஜிபுர் ரகிமானை விடுதலை செய்ய முயற்சிக்க வேண்டும்' என்று பதிலளித்தார்.

"முஜிபுர் ரகிமானை விடுவிக்க இந்தியா என்ன செய்யும்" எனக் கேட்கப்பட்டதற்கு, 'நாங்கள் நேரடியாக எதையும் செய்ய முடியும் என்று நினைக்கவில்லை; உலக நாடுகளிடமெல்லாம் நாங்கள் இதனை எடுத்துச்சொல்லியிருக்கிறோம்; அவை பாகிஸ்தானை அதற்கு இணங்க வைக்கும் என்று நம்புகிறேன்" எனத் தெரிவித்தார்.



இந்திராவின் அஞ்சா நெஞ்சம்

அனைத்துக் கட்சிகளின் புகழ் மாலை

புதுடில்லி, டிச. 19—

பாகிஸ்தானுடன் நடைபெற்ற போரில் இந்தியாவைத் திறமையாக வழிநடத்திச் சென்றமைக்காக நடைபெற்ற பாராட்டு விழாவில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தலைமையமைச்சர் இந்திரா காந்தியைப் பாராட்டிப் புகழ்ந்து பேசினர்.

துணைக் குடியரசுத் தலைவரும் — மாநிலங்களவைத் தலைவருமான பாதக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற இரு அவைகளையும் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

சிண்டிகேட் தலைவர் மொரார்ஜி தேசாய் உட்பட பல எதிர்க்கட்சித் தலைவர்களும் இந்திரா காந்தியையும் — அவரது ஆற்றலையும் புகழ்ந்து பேசினர்.

அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் அவருக்கு மாலைகள் அணிவித்தனர்.

தி. மு. கழக உறுப்பினர் கி. மனோகரன் அவர்கள் ஆள் உயர ரோஜா மாலை ஒன்றைத் தலைமையமைச்சருக்கு அணிவித்தார்.

நாடாளுமன்ற இரு அவைகளின் சார்பிலும் மக்களவைத் தலைவர் தில்லான், திருமதி இந்திரா காந்திக்கு வரவேற்பிதழ் படித்தளித்தார்; "இந்திரா காந்தியின் தொலை நோக்கும் — அஞ்சாநெஞ்சம் படைத்த தலைமையும் — 750 இலட்சம் மக்கள் விடுதலையடைவதில் அவர் ஆற்றியுள்ள பங்கும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்" என்று வரவேற்பிதழில் கூறப்பட்டிருந்தது.

போர் நிறுத்தம் — நாமே விரும்பினோம்

பாராட்டுக்குப் பதிலளித்துப் பேசுகையில், தலைமையமைச்சர் இந்திரா காந்தி கூறியதாவது :—

"இந்தியா, தானாக விரும்பியே மேற்கு முனையில் போர் நிறுத்தம் செய்தது; வேறு யாரும் கேட்டுக்கொண்டதற்காக அவ்வாறு செய்யவில்லை.

'மனித வர்க்கத்தின் மீதுள்ள எல்லாவிதமான அடக்குமுறைகளிலிருந்தும் உலகத்தை விடுவிக்க இந்தியாவும் — வங்காள தேசமும் — மற்றும் சுதந்தரத்தையும் மனித உரிமையையும் நாடுகின்ற மக்களும் ஒன்று சேர வேண்டும்.

"நாம் செல்லவேண்டிய தூரம் வெகு தொலைவில் இருக்கிறது; மலையின் உச்சியில் ஏறவேண்டியிருக்கிறது; இடையில் உள்ள இடையூறுகள் பல ஆகும் என்பதையெல்லாம் மறந்துவிடக்கூடாது.

"ஒற்றுமை உணர்வுடனும் — தியாக உணர்ச்சியுடனும் இந்த இக்கட்டுகளையெல்லாம் நாடு கடக்கும்; வீர நடைபோட்டு மேலும் மேலும் நாம் முன்னேறுவோம்; நம்முடைய நாடு தரத்திலும் — புகழிலும் உச்சக் கட்டத்திற்குச் செல்லும்."

போர் வீரர்களுக்கு உதவப் பொருள்கள் வசூல்

கலைஞர் துணைவியார் தலைமையில் மகளிர் பணி

சென்னை, டிச. 20—

நாளை (டிச. 21) திருமதி தயாளு கருணாநிதி தலைமையில் அமைச்சர்களின் துணைவியரும் — பிற சமூக நல மகளிரும் சென்னை நகரில் கீழ்க்காணும் பகுதிகளுக்கு நேரில் சென்று போர் வீரர்களுக்குத் தேவையான பொருட்களைத் திரட்டுவோர்கள் :—

காலை 10 மணி :	நேதாஜி சாலை (பூக்கடை)
மாலை 3 மணி :	மயிலை லஸ் பகுதி
மாலை 5 மணி :	தியாகராயநகர் (பாண்டி பசார்)
மாலை 7 மணி :	புரசைவாக்கம் (கடை வீதி)

இரஷ்யாவிலிருந்து மண்ணெண்ணெய்

இரு நாடுகளுக்குமிடையே புதிய ஒப்பந்தம்

புதுடில்லி, டிச. 16—

இந்தியாவுக்கு இரஷ்யா 5 இலட்சம் டன் மண்ணெண்ணெய் அனுப்புகிறது.

இரஷ்ய வெளிநாட்டு வர்த்தக அதிகாரி என். பி. ஷிரியாயேவ் இந்தியாவிற்கு வந்துள்ளார்; டில்லியில் இந்திய அதிகாரிகளை அவர் சந்தித்துப் பேசினார்.

பின்னர் அவர் கூறியதாவது :—

"இந்தியா — இரஷ்யாவுக்கு இடையே புதிய வியாபார ஒப்பந்தம் ஏற்படுகிறது; அதன்படி இந்தியாவுக்கு 5 இலட்சம் டன் மண்ணெண்ணெய் இரஷ்யா அனுப்பும்.

இந்த மண்ணெண்ணெய் அடுத்த மாதம் முதல் இந்தியாவிற்கு வரத் தொடங்கும்."

இந்திரா காந்திக்கு 'பாரத ரத்னா' விருது

புதுடில்லி, டிச. 18—

நாட்டின் மிக உயர்ந்த கௌரவ 'பாரத ரத்னா' விருது, தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு அளிக்கப்படுகிறது.

திருமதி இந்திரா காந்திக்கு 'பாரத ரத்னா' விருதைக் குடியரசுத் தலைவர் மிக மகிழ்ச்சியுடன் அளிப்பதாகக் குடியரசுத் தலைவரின் மாளிகை அறிவிப்புத் தெரிவிக்கிறது.

1955-ம் ஆண்டில் இந்த விருது ஏற்படுத்தப்பட்டது. கடந்த 16 ஆண்டுகளில் — ஜவகர்லால் நேரு, டாக்டர் பி. சி. ராய், டாக்டர் விஸ்வேசுவரய்யா, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், இராசகோபாலாச்சாரியார், கோவிந்த வல்லப பந்த், டாக்டர் பி. வி. கனே உட்பட 14 பேர் இவ்விருதைப் பெற்றிருக்கின்றனர்.

1966-ல் தலைமையமைச்சராக இருந்த லால்பகதூர் சாஸ்திரிக்கு — அவர் இறந்த பிறகு — இவ்விருது அளிக்கப்பட்டது.

அதற்குப்பின், இந்த விருது யாருக்கும் அளிக்கப்படவில்லை.

நாட்டுப் பாதுகாப்பு :

புரட்சிநடிகர் நன்கொடை

ஒரு படத்தில் கிடைக்கும் ஊதியம் முழுவதையும் வழங்க முடிவு

சென்னை, டிச. 20—

தாம் நடிக்கும் ஒரு திரைப் படத்தின்மூலம் தமக்குக் கிடைக்கும் ஊதியம் முழுவதையும் நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு வழங்க முடிவு செய்திருப்பதாகக் கழகப் பொருளாளர் புரட்சிநடிகர் எம் ஜி ஆர். அவர்கள் அறிவித்துள்ளார்.

நேற்று சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற நட்சத்திர இரவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையில் இதனை அவர் அறிவித்தார்.

இவ்விழா, மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா விழாவைத் துவக்கிவைத்தார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலை நிகழ்ச்சி நடத்தி ரசிகர்களைக் கவர்ந்த நடிக — நடிகையர்கட்கு, 'ஜெய்கிஷன் நினைவுச் சான்றிதழ்'களை வழங்கினார்.

தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் ஏ. பி. சி. வீரபாகு விழா மலரை வெளியிட்டார்.

மாணவர் கலாச்சாரக் குழுச் சார்பில் நடைபெற்ற இவ்விழாவுக்கு வந்திருந்தவர்களை மாணவர் தலைவர் என். ரவீந்திரன் வரவேற்றார்.

ஜெயலலிதா நன்கொடை

இந்த விழாவில் கலந்துகொண்ட நடிகை ஜெயலலிதா, நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு ரூ. 5,000-த்துக்கான 'செக்'கை மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியத்திடம் வழங்கினார்.

மாநகராட்சி தி.மு.க. உறுப்பினர் கா. முருகேசன் மறைவு

சென்னை, டிச. 20—

சென்னை 65-வது வட்டம் சேத்துப்பட்டைச் சேர்ந்த மாநகராட்சி தி.மு.க. உறுப்பினர் தோழர் கே. முருகேசன் தமது 52-வது வயதில் நேற்றிரவு 11 30 மணியளவில் திடீரென இயற்கையெய்திய செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழர் கே. முருகேசன், இரண்டாம் முறையாக சென்னை மாநகராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவி வகித்தவர் ஆவார்.

நேற்றிரவு திடீரென அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது; மருத்துவர் வருவதற்கு முன்பே சுமார் 11-30 மணியளவில் இவர் இயற்கையெய்திவிட்டார்.

முதன்முதலாகத் தி. மு. கழகம் சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றியபோது வென்ற நமது உறுப்பினர்களுள் இவரும் ஒருவராவார்; அப்போது, நிதி மற்றும் வரி விதிப்பு நிலைக் குழுவின் தலைவராக அவர் பணியாற்றியுள்ளார்.

மறைந்த தோழருக்கு மனைவியாரும் இரு புதல்வியரும் உள்ளனர்.

அவரது உடல் இன்று மாலை 5-மணியளவில் நுங்கம்பாக்கம் இடுகாட்டில் அடக்கம் செய்யப்படுகிறது.

தோழர் முருகேசன் அவர்களை இழந்து துயருறும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக.

—ஆசிரியர்

முஜிபுர் ரகிமான் விடுதலையாவார்?

பொம்மைத் தலைமையமைச்சர் நம்பிக்கை

இராவல்பிண்டி, டிச. 20—

'முஜிபுர் ரகிமான் விரைவிலேயே விடுதலை செய்யப்படக் கூடும்"

என்று, ஏற்கனவே 'தலைமையமைச்சர்' என்று அறிவிக்கப்பட்டிருந்த நூருல் அமீன் நம்பிக்கை தெரிவித்தார்.

"இனிமேல் அவரைக் காவலில் வைத்திருப்பதற்குக் காரணம் ஏதுமில்லை" என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] (26, [illegible] ரோடு, சென்னை-[illegible]) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.